கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை

1.5.1972


30 காசு





ஆண்மை —
அடக்கியாளும்,
ஆர்வமூட்டும்,
அலைபாயும்,
அதிரடிக்கும்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த படைப்பு
'டெரோஸெல்'
ஷர்ட்டிங்!
டெரோஸெல்®
'டெரோஸெல்' என்றொரு திருச்சொல்—தரிப்பவனை மன்னனுக்கும் தாரக மந்திரம்! மபத்லால் 'டெரோஸெல்' ஷர்ட்டிங்—எழிலாடும் வண்ணங்களில், இளஞ் சாயல்களில், திசையெட்டும் வென்றிட்ட டிசைன்களில் வருகுது.
ஒப்பிலா ஆடவ மாமணிகளுக்கு உறவுசொல்லும் ஷர்ட்டிங்!
உயர்தரக் காட்டன் மற்றும் போலியெஸ்டர் இழைகலந்த பழுதில்லா நெசவு!
மபத்லால் க்ரூப்



பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்
*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
Incremin syrup
TONIC APPETITE STIMULANT
Lederle
*
சேருவீர் இன்க்ரிமின் இரசத்தோடு... வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வாழ்வுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரதச் சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
◀ பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.
இன்க்ரிமின்*
டானிக் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸையானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
லின்டாஸ்-INC, 22 - 140 TM



பரிதாபி
சித்திரை 18 ★ மே 1, 1972 ★ மலர் 1
இதழ் 2



கோகுலம்

சந்தா விவரம்:

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7-00
ஆறு மாதம்	ரூ.	3-50
இலங்கை (இலங்கை நாணயப்படி)	ரூ.	9-00
இதர நாடுகள்		18 00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

- பாரதியார்





ஆத்திசூடி

ஆறுவது சினம்

சினம்: மனத்தில் தங்கும் கோபம் **ஆறுவது:** தணியத்தக்கது

கோபத்தினை ஆற்ற வேண்டும். இல்லாவிட்டால் அது பிறரைத் துன்பப் படுத்துவதுமல்லாமல் தன்னையும் சுடும். அதாவது துன்பப்படுத்தும். குடும்பத்தி லும் ஊராருடனும் சரியாக வாழ, கோபத்தைத் தணிப்பது மிகவும் அவசியம்.

இயல்வது கரவேல்

இயல்வது: உன்னால் செய்யக் கூடிய தரும காரியங்களை - **கரவேல்:** மறைக் காதே. அதாவது செய்ய முடியாது என்று விட்டு விடாதே.

பிறருக்குச் செய்யக் கூடிய உதவியை முடியாது என்று சொல்லி விடாதே. கடவுள் உனக்குக் கொடுத்திருக்கும் சக்தியை அறிந்துகொள். அறிந்து முயற்சி செய்தால் அறஞ் செய்ய முடியும். சக்தி இல்லை என்று நினைத்துக் கொள்ளு வது தவறு.

ஈவது விலக்கேல்

ஈவது: பிறர் ஒருவருக்குக் கொடுப்பதை - **விலக்கேல்:** நீ நடுவே புகுந்து கொடாமல் தடுக்காதே.

உடையது விளம்பேல்

உடையது: உன்னிடத்தில் இருப்பதை - உன்னுடைய பொருள், கல்வி, நற்குணம் முதலிய பெருமைகளை **விளம்பேல்:** சொல்லிக் கொள்ள வேண்டாம்.

உன்னைவிட அதிகம் பெற்றவர்களிடம் சொல்லிக் கொள்வது நகைப்புக்குக் காரணமாகும். தாழ்ந்தவர்களிடம் சொல்லிக் கொள்ளுவதும் தகாது. அடக்கம் வேண்டும். உன்னிடமுள்ள பொருள், கல்வி, நற்குணம் முதலியவைகளைப் பிற ருக்கு உதவி செய்து செயல் வழியாக அறியச் செய்ய வேண்டும்.

ராஜாஜி





கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

பூபாரம்

**கண்ணோட்டத் துள்ளது
உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை**

என்கின்றார் திருவள்ளுவர்.

துவாபர யுக முடிவில் மனிதர்களிடம் அநீதிகள், அக்கிரமங்கள், கொடுமைகள் முதலிய தீங்குகள் கூடிக் கோர தாண்டவம் செய்தன.

மக்கள் பண்பாடு இன்றி அறநெறி வழுவி, மறநெறி தழுவி வாழ்ந்தார்கள்; பாவப் படுகுழியில் ஆழ்ந்தார்கள். அவர்கள் நெஞ்சில் வஞ்சமும், வாக்கில் பொய்மையும், செய்கையில் கொலை களவுகளும் நிறைந்திருந்தன. அதனால் அன்பு, அருள், உண்மை, ஒழுக்கம், தவம், தருமம் முதலிய நற்பண்புகள் மறைந்து ஒழிந்தன.

இத்தகைய குணக் கேடர்களின் பாவச் சுமையைத் தாங்காது பூதேவி பெரிதும் துயரம் அடைந்தாள்.

நிலையின்றி நடுங்கிய நிலமடந்தை பசு வடிவுடன் சத்திய உலகஞ் சென்று பிரமனின் மலரடியைத் தொழுது அழுதாள்.

''பிரம தேவரே! தீயவர்களின் பாவச் சுமையைத் தாங்கமாட்டாமல் தவிக்கின்றேன். கருணை புரியும்'' என்று முறையிட்டான்.

பிரமதேவர் பூதேவியை அழைத்துக் கொண்டு தேவர்கள் புடைசூழப் பாற்கடல் சென்றார். பாற்கடலில் கார்க் கடல்போல் அரவணையில் அரிதுயில் புரியும் நாரணனை

**அருணயந் தநிஞர் போற்றும்
அண்ணலே போற்றி; ஞானப்
பொருணயம் புகலும் வேதம்
புகழு மெய்ப் பொருளே போற்றி
தருணமங் கையர்கள் பார்வை
சார்தராத்தவர் காணுங்
கருணையங் கடலே போற்றி
கருமுகிற் கொழுந்தே போற்றி**

என்று துதி செய்து தொழுதார்கள்.

ஆராவமு தருளிய நாராயணர், ''பூதேவி! பிரமாதி தேவர்களே! நாம் கோகுலத்தில்








கோபாலனாக அவதரிப்போம். பூபாரந் தீர்ப்போம். அஞ்சற்க'' என்று அருள்மொழி பகர்ந்தார்.

யதுகுலத்தின் பெருமை

ஸ்ரீ ராமர் சூரிய குலத்தில் தோன்றினார். பாண்டவர்கள் சந்திர குலத்தில் தோன்றினார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் யதுகுலத்தில் அவதரித்தார். என்ன காரணம்? சந்திர குலத்துப் புகழ்பெற்ற வேந்தனாகிய யயாதிக்கு ஐந்து புதல்வர்கள்; யது, துர்வஸு, திருஹ்யு, அனு, பூரு என்று பேர் பெற்றவர்கள்.



யயாதிக்கு சுக்கிரருடைய சாபத்தால் கிழப் பருவமும் காச நோயும் உண்டாயின. சுக்கிரருடைய அருளால் அவற்றை விருப்பம் உள்ளவரை தன் மக்களிடம் தந்து அவர்களின் இளமை வடிவைப் பெறும் சக்தியும் கிடைத்தது.

யது என்ற மூத்த மகனை அழைத்து, ''மகனே! எனக்கு இன்னும் உலக வாழ்வில், இன்பத்தில் உவர்ப்பு எய்தவில்லை. ஆதலால் எனக்கு வந்த இந்த முதுமையையும் காச நோயையும் நீ பெற்றுக் கொண்டு, உன் இளமையை எனக்குக் கொடு. பிறகு இளமையை நீ என்னிடம் பெற்றுக் கொள். அவ்வாறு செய்வாயாயின் என் அரசு முழுவதும் உனக்குத் தருவேன்'' என்றான்.

யது தனக்குள் சிந்தித்தான். அரச வாழ்வைக் காட்டிலும் ஒழுக்கமே உயர்ந்தது. என் இளமையைப் பிதாவுக்குத் தந்தால், என் இளமை என்னைப் பெற்ற தாயுடன் மருவும். அது அதிபாதகம். ஆதலால் அரசாட்சியைப் பெறுவதைக் காட்டிலும் ஒழுக்கம் தவறாததுவே உயர்வு என்று எண்ணி, அதை வெளிப்படையாகக் கூற நாணி, தன் இளமையைத் தர மறுத்தான்.



கடை மகன் பூரு என்பான் யயாதிக்கு இளமையைத் தந்தான். ஆயிரம் ஆண்டு யயாதி இளமையுடன் வாழ்ந்த பின், திரும்பப் பூருவுக்கு அவனது இளமையைத் தந்து அரசும் தந்தான்.

யது அரசு பெறாது ஒதுங்கிக் கொண்டான். இத்தகைய ஒழுக்கத்தில் உறுதி கொண்டவன் யது. அவன் வழி வந்த குலம் யதுகுலம். அவர்களை யாதவர்கள் என்பார்கள். அவர்கள் இடைந்திருந்ததனால் இடையர்கள் எனப் பேர் பெற்றார்கள். ஒழுக்கத்தை உயிரெனக் கருதிய உயர்ந்த பண்புள்ள குலம் யதுகுலம். அதனால் பகவான் யதுகுலத்தில் கண்ணனாக அவதரித்தார். (தொடரும்)

ஓர் இனிப்பான கதை!





சாக்லேட், மிட்டாய், கேக்.... பெயரைக் கேட்டாலே வாயில் நீர் சுரக்கிறதில்லையா? வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் நீங்கள் பார்ப்பது அவர்கள் கையில் உள்ள பையை. அதனுள்ளே இருப்பது சாக்லேட்டா, மிட்டாயா என்ற ஆராய்ச்சியும் தவிப்புமாக நிற்கிறீர்கள். உங்களால் இப்படி மிகவும் விரும்பப்படும் சாக்லேட், மிட்டாய் இவை முதன் முதலில் எப்படிச் செய்யப்பட்டன, இன்றுள்ள தோற்றம்தான் ஆதியில் அவைகளுக்கு இருந்ததா?

பாரத மக்களாகிய நமக்கு, இனிப்புப் பட்சணங்களைப் பற்றி உலகின் மற்ற தேசத்து மக்களை யெல்லாம் விட முன்னாலேயே தெரியும். ஏனென்றால் கரும்பையும் அதன் உபயோகத்தைப் பற்றியும் பிறநாட்டவர் நம்மிடமிருந்து தான் அறிந்து கொண்டார்கள். ஐரோப்பியர்களுக்கு முதன் முதலில் கரும்பை அறிமுகப்படுத்தியவர் கிரேக்க வீரர், மகா அலெக்சாந்தர்தான். பாரதத்தை வெற்றி கொண்டு தாயகம் திரும்பிய அலெக்சாந்தரின்வீரர்கள் 'தேனைத் தரும் இனிக் கும்கம்புகள்' என்று இந்தியாவிலிருந்து கொண்டு போன கரும்பங் கழிகளைக் காட்டினார்கள்.



கரும்பைப் பற்றித் தெரிவதற்கு முன்னால் மேலை நாட்டு மக்கள் ஆதி காலத்தில் தேனையும், சுவை மிக்க பழங்களையும் கலந்து மிட்டாய் தயாரித்து வந்தார்கள். கரும்பும் சர்க்கரையும் பழக்கத்துக்கு வந்த மத்திய காலத்தில் மேலை நாட்டாரின் மிட்டாய்: **ஹனி கேக்கும்**, சர்க்கரை தடவிய மருந்து மாத்திரைகளான **'ஷுகர் ப்ளம்ஸ்'**களும்தான்.

இந்த 'ஷுகர் பிளம்ஸ்' மாத்திரைகளை நோயாளிகள் மட்டுமல்லாமல் ஆரோக்கியமாயுள்ளவர்களும் விரும்பிச் சாப்பிடவே, இவற்றை மருந்துக் கடைகளில் விற்கும் பழக்கம் மாறி ரொட்டிக் கடைகளிலும் விற்கலானார்கள். சர்க்கரையின் உபயோகம் தெரிந்தபிறகு ஏற்பட்ட 'மிட்டாய்' என்பது இவ்வித மாத்திரைகள்தான். சர்க்கரையின் புகழ் வர வரப் பெருகலாயிற்று.




இந்த வேளையில்தான் ஸ்பானிஷ்காரர்கள் தென் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்கள். அங்கு அவர்கள் 'அஸ்டெக் இந்தியர்' என்ற

கீட்டு








பழங்குடி மக்களையும் அவர்களது குடிப் பழக்கமான சாக்லெட் பானத்தையும் கண்டார்கள். கோகோ விதையிலிருந்து தயாரிக்கப்பட்ட கசப்பான, ஆனால் ஊக்கமூட்டும் ஒருவகைப் பானத்தை 'அஸ்டெக்' பழங்குடி மக்கள் அருந்தி வந்தார்கள். ஸ்பானிஷ்காரர்கள் அந்தக் கசப்புப் பானத்துடன் சர்க்கரையைக் கலந்து அதற்கு இனிப்பு ஊட்டினார்கள். சாக்லேட் உதயமாயிற்று. இப்போது நீங்கள் பாளம் பாளமாகச் சாப்பிடுகிறீர்களே, 'சாக்லேட் கட்டி' அது. இதற்கு இருநூறு வருடங்களுக்குப் பிறகே தோன்றியது. அதுவரை சுவையிருந்த கோக்கோ பானமே பழக்கத்திலிருந்தது மேலை நாடுகளில்.

சாக்லேட்டையும், 'காண்டி' எனப்படும் மிட்டாய்களையும் சுவைக்கும் தகுதி பணக்காரர்களுக்குத்தான் இருந்தது ஆதியில். அமெரிக்காவில் குடியேறியவர்கள் சிக்கனத்தைக் கருதி 'காண்டி' தயாரிப்பதற்கு அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தார்கள். ஏனென்றால் மிட்டாய்கள் மிக விலை உயர்ந்த பொருளாகக் கருதப்பட்ட காலம் அது. மிட்டாய்களை ரகசியமாக வீட்டில் மட்டும் தயாரித்தார்கள். அந்த மிட்டாய்கள் கையிலும் வாயிலும் ஒட்டிக் கொண்டு உபத்திரவம் கொடுத்தன.

இன்றும்கூட காண்டியைச் சுவைக்கும் பழக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ரஷ்யர் 'டீ' அருந்தும்போது காண்டியையும் அதனுடன் சுவைத்து ரசிக்கிறார்கள். மெக்ஸிகோ நாட்டுச் சிறுவர்களுக்கு மனிதன் மண்டையோட்டு வடிவில் செய்த காண்டிகளைச் சுவைப்பதில் ஒரு தனி ஆசை. பெல்ஜியம் தேசத்தில் 'ஜிஞ்சர் பிரட்' என்ற ஒருவகை ரொட்டியை நிஜ மனிதர்களின் உருவத்துக்குப் பெரிதாகச் செய்து வைக்கிறார்கள். இது ஒரு கேக் போல.


ஜெர்மனி தேசத்துக் குழந்தைகள் முதல் முதலில் பள்ளிக்கூடம் போகும்போது அட்டையால் செய்யப்பட்ட 'கோன்'களில் நிறையக் காண்டிகளை — மிட்டாய்களை — நிரப்பிக் கையில் கொடுத்து அனுப்புவார்களாம். துருக்கியில் வருஷத்தில்—ஒரு நாளைக் 'காண்டி டே'— மிட்டாய்களைச் சுவைக்கும் தினம் — என்றே ஒதுக்கி வருகிறார்கள். அன்று முழுவதும் குழந்தைகளுக்கு அவர்கள் சந்திக்கும் பெரியவர்களிடமிருந்தெல்லாம் மிட்டாய்கள் பரிசாகக் கிடைத்துக் கொண்டே இருக்கும். சீன தேசத்தில் மிட்டாய் தடவிய ஆப்பிள்களை—'காண்டி ஆப்பிள்ஸ்'—குழந்தைகளுக்குச் சுவைக்கக் கொடுப்பார்கள்.

இப்போது மிட்டாய்களிலும் சாக்லேட்டுகளிலும்தான் எத்தனை விதம்! எவ்வளவு சுவை, அப்பப்பா! ஆனால் இத்தனையும் கரும்பை உலகுக்குப் பாரதம் அளித்திருந்தாலே?









ஆசியே ஆஸ்தி

வெகு காலத்துக்கு முன்னே கிரேக்க நாட்டில் ஒரு கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். அவர்கள் ரொம்ப ரொம்ப ஏழைகள். அன்றாட உணவுக்குக்கூட வகையில்லாத அப்படிப்பட்ட வறுமை. தம்பதி இருவரும் நோய்வாய்ப் பட்டார்கள். மரணப் படுக்கையில் இருந்தபோது அவர்கள் தங்கள் மகனை அருகே அழைத்தார்கள். அவனிடம் அவர்களுக்கு உயிர். அதே போல் பெற்றோர்களிடம் மகனுக்கு மதிப்பும் மரியாதையும் பாசமும் பக்தியும் உண்டு.

''மகனே! எங்கள் வாழ்வு முடியப் போகிறது. உனக்கு நாங்கள் ஆடு, மாடு, நிலம், திராட்சைத் தோட்டம் எதுமே வைத்து விட்டுப் போகவில்லை. நாங்கள் உனக்கு விட்டுச் செல்லும் ஒரே ஆஸ்தி எங்களுடைய ஆசீர்வாதம் தான். அப்பனே! நீ மண்ணைக் கையில் எடுத்தால் அது பொன்னாகும்'' என்று கூறிவிட்டு, அந்த ஏழைப் பையனுடைய பெற்றோர் இறந்து போனார்கள்.

அவர்களுடைய ஆசிகளையே ஆஸ்தியாகக் கொண்டு வாழ ஆரம்பித்தான் அந்த ஏழைப் பையன். அவன் தொட்டதெல்லாம் துலங்கியது. வாழ்க்கையில் முன்னேறினான். பெரும் செல்வந்தனானான். எதைத் தொட்டாலும் பொன்னாகும்போது அவன் ஏழையாகவா அழுது கொண்டிருப்பான்?

ஆனால் செல்வம் குவிந்த போதும் அவன் அழத்தான் செய்தான். ஒரு நாள் தன் அருமை நண்பனிடம் தனது வேதனையைக் கூறினான். ''எனக்கு ஒரே குழப்பமாகவும் கவலையாகவும் இருக்கிறது. ஒரு காலத்தில் நான் ஏதுமற்ற அநாதையாக இருந்தேன். இன்று எல்லாம் படைத்த சீமானாக இருக்கிறேன். நான் எதைச் செய்தாலும் அது வெற்றி பெறுகிறது. பிறருக்கு நஷ்டம் ஏற்படும் காரியங்கள் எனக்கு லாபமாக இருக்கின்றன. நஷ்டம் என்றால் என்ன என்றே எனக்குத் தெரிந்ததில்லை. ஆனால் இத்தனை அதிருஷ்டமும் மகிழ்ச்சியும் திடீரென்று ஏதாவது துக்கமாக முடியுமோ என்று கவலையாக இருக்கிறது. ஆகவே ஏதாவது ஒரு காரியம் செய்து அதில் தோல்வியோ நஷ்டமோ அடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் எதைச் செய்து எப்படி நஷ்டமடைவதென்று தெரியவில்லை.''



கிரேக்க நாட்டு நாடோடிக் கதை


அவன் நண்பன் சிறிது நேரம் சிந்தனை செய்தான். பிறகு, ''எப்படி நஷ்டமடைவது என்பதற்கு நான் ஒரு வழி சொல்லுகிறேன். பேரீச்சம் பழங்கள் நமக்கு எங்கிருந்து வருகின்றன?'' என்று கேட்டான் நண்பன்.

'' எகிப்து நாட்டிலிருந்து '' என்று பதிலளித்தான் சிமாஜுனை இளைஞன்.

''கிரேக்க நாட்டில் கிடைக்கும் பேரீச்சம் பழம் அத்தனையையும் வாங்கு. அவைகளைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு எகிப்துக்குப் போ. அங்கு போய் இறங்கியதும் ஒட்டகங்களை வாங்கு. அவைகளின் மீது பேரீச்சம்பழங்களை ஏற்றிக் கொண்டு கெய்ரோவுக்குச் சென்று விற்பனை செய்துபார்!'' என்றான் நண்பன்.

நண்பனின் யோசனை பணக்கார வாலிபனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. ஆகவே கிரேக்க நாட்டில் கிடைத்த எல்லாப் பேரீச்சம் பழங்களையும் வாங்கிச் சேகரித்தான். அவைகளைக் கப்பல்மூலம் கடல் கடந்து அனுப்பினான். பிறகு பாலைவனத்தின் வழியாகக் கெய்ரோவுக்குப் பழங்களுடன் பயணமானான்.

நஷ்டத்தை எதிர்நோக்கிப் பிரயாணம் செய்யும் பணக்கார



வாலிபன் கெய்ரோ நகரை நெருங்கும் வேளையில் எகிப்து நாட்டின் மன்னர் தம் பரிவாரங்களுடன் வேட்டைக்குக்கிளம்பி யிருந்தார். பாலைவனத்தின் வழியே போகும்போது, வேட்டையில் மன்னரின் திருமண மோதிரம் நழுவி மணலில் எங்கோ விழுந்து விட்டது. இதனால் மன்னர் ரொம்பவும் வேதனைப்பட்டார். திருமண நினைவு மோதிரமாயிற்றே? தன் வீரர்களை யெல்லாம் விட்டுப் பாலை மணலில் மோதிரத்தைத் தேடும்படி கட்டளையிட்டார். வீரர்கள் பாலைவனத்து மணலைச் சல்லடை போட்டுச் சலிக்காத குறைதான். ஆனால் மோதிரம் அகப்படவில்லை.

மன்னருக்கு வருத்தமான வருத்தம். அப்போது தூரத்தில் ஒட்டகங்கள் வரிசையாக வந்து கொண்டிருப்பதைக் கண்டார். நம் செல்வச் சீமான்தான் பேரீச்சம் பழங்களுடன் பிரயாணம் செய்து வந்து கொண்டிருந்தான். மன்னர் தம் வீரரில் இருவரை அனுப்பி அவனைத் தம்மிடம் அழைத்து வருமாறு கூறினார்.

பணக்கார கிரேக்க வாலிபன் மன்னரின் அருகே வந்ததும் ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கி மன்னருக்கு மண்டியிட்டு வணக்கம் செலுத்தினான்.

''எந்த நாட்டிலிருந்து வருகிறாய் நீ?' என்ற அரசர், ''என் நாடான எகிப்தில் வியாபாரம் செய்ய என்ன பொருள் கொண்டு வந்திருக்கிறாய்?'' என்றும் கேட்டார்.

''நான் கடல் கடந்து வருகிறேன், அரசே!'' என்றான் வாலிபன். ''என் தாய் நாடு கிரேக்க தேசத்தில் உள்ளது. எகிப்தில் பேரீச்சம்பழங்களை விற்பனை செய்ய என்னுடன் கொண்டு வந்திருக்கிறேன்.''

மன்னர் மோதிரம் இழந்த வேதனையை மறந்து கண்களில் நீர் கசியச் சிரிக்கலானார். ''உன்னைப் போல் ஒரு பைத்தியக்காரனை நான் பார்த்ததேயில்லை. எந்தப் பொருள் எங்கு அதிகமாக விளைகிறதோ அதே பொருளை, வெளியிலிருந்து அங்கு கொண்டு வந்து விற்க நினைக்கும் உன் புத்திசாலித்தனம் தான் என்னே?'' என்று பரிகசித்தார். பிறகு ''என்ன விலைக்குப் பழங்களை விற்பதாக உத்தேசம்?'' என்று கேட்டார் அரசர்.

''ஒரு படி பேரீச்சம்பழம் ஏழு வெள்ளிக் காசுகளுக்கு விற்க நினைக்கிறேன்'' என்றான் வாலிபன்,


''இங்கு ஒரு வெள்ளிக் காசுக்கு இரண்டு படி பேரீச்சம் பழம் கிடைக்கும் போதே மக்கள், தாங்கள் ஏமாற்றப்படுவதாக நினைக்கிறார்கள். அப்படி இருக்க இப்படி ஒரு முட்டாள் வியாபாரியை...'' மன்னரை முடிக்கவிடவில்லை வாலிபன்.

''அரசே! தயவு செய்து என் கதையைக் கேளுங்கள். நான் பெரிய அறிவாளியாக இல்லாதிருக்கலாம். ஆனால் நீங்கள் நினைக்கிறபடி முட்டாள் அல்ல. என் பெற்றோர் இறக்கும்போது என்னிடம் செப்புக் காசுகூட இல்லை. அவர்கள் தங்களுடைய ஆசியைத்தான் எனக்கு ஆஸ்தியாக வைத்து விட்டுப் போனார்கள். என் பெற்றோரின் அந்த ஆசியே என்னைச் சில காலத்துக்குள் பெரிய சீமானாக்கி விட்டது. அந்த அதிர்ஷ்டத்தையே நான் ஆபத்தாக நினைக்கலானேன். ஏதோ ஒரு பெரிய துயரம் என்னைச் சூழப் போவதாக ஒரு பயம் என்னை வாட்டலாயிற்று. ஆகவே ஏதாவது ஒரு வியாபாரம் செய்து அதில் பெருநஷ்டம் அடைவது என்று முடிவு செய்தேன். அதன் விளைவே பேரீச்சம்பழங்களை விற்பதற்காக எகிப்துக்கு வந்திருக்கிறேன்.'' ஒரு நீண்ட வேதனை நிறைந்த பெருமூச்சோடு தன் கதையைக் கூறி முடித்தான் இளைஞன். மேலும் தொடர்ந்தான்: ''இந்தவேளையிலும் கூட ஏதோ ஒரு சக்தி நான் விரும்பும் நஷ்டத்தை எனக்குத் தராமல் தடுக்கக் கூடும் என்று அஞ்சுகிறேன். இதோ இந்தப் பாலைவனத்து மணலை நான் கையால் அள்ளினாலேகூடப் போதும். அது தங்கமாக மாறிவிடும்'' என்று கூறிக் கொண்டே குனிந்து ஒரு கை நிறையப் பாலைவன மணலை எடுத்து அதை விரலிடுக்குகள் வழியே வழிய விடலானான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? மணல் வடிந்ததும் அவன் கைகளில் மன்னரின் மோதிரம் பளிச்சிட்டுக்கொண்டு கிடந்தது.

தன் அருமை மோதிரத்தை அந்த அழகு வாலிபனின் கையில் கண்டதும் மன்னரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ''நீ கொண்டு வந்துள்ள சரக்குகள் அத்தனையையும் அரண்மனையில் இறக்கு. எல்லாப் பேரீச்சம்பழங்களையும் நானே வாங்கிக் கொள்கிறேன். ஒரு படி ஏழு வெள்ளி வீதமல்ல அப்பனே! பதினேழு வெள்ளிக்கு ஒரு படி வீதம்!'' என்றார் மன்னர்.

நஷ்டத்தைத் தேடிக் கெய்ரோவுக்குப் பேரீச்சம்பழம் விற்கப் போனபோதும் கூட அந்த வாலிபனுடைய பெற்றோரின் ஆசி அவனைக் காப்பாற்றி விட்டது. தாய் தந்தையரின் மனப்பூர்வமான ஆசி இருக்குமானால் என்னதான் நடக்காது?


சிரிக்கச் சிரிக்க..
சாமா/
'ரோம்ப அறிவுள்ள குதிரைங்க! னக்கு எவ்வளவு தெரியுமோ வ்வளவு அதுக்கும் தெரியும்!''
''குதிரை காது பட இப்படிச் சொல்றியே, அது வருத்தப் டாதா ?''
பெல் ரிப்பேர் செய்யப் படும்
''எங்கள் வீட்டுக் காலிங் பெல்லை ரிப்பேர் செய்வதற்குக் கூப்பிட்டேன். நீங்கள் வரவே யில்லையே !''
''வரவில்லையா ? மூனு தடவை வந்து வாசலில் பெல் அடித்தேன். ஒருவரும் என்னு கேட்கல்லே ; வந்துட்டேன்.''
''ஏண்டா பந்தைத் தடுத்து நிறுத்தல்லே.''
''இப்ப என்ன குடிமுழுகிப் போச்சு ? பந்து வலைக்குள்ளேயேதானே கிடக்கு !''
''போடா ! சறுக்கு மரம் விளையாடறதுக்கு எங்கப்பா முதுகுதான் அகப்பட்டுதோ? போய் உங்கப்பா முதுகிலே சறுக்கேன்.''








மதராஸிலிருந்தும் மகாபலிபுரம் போய்ப் பார்க்காதவர்கள் அநேகருண்டு. நீங்கள் அப்படி இல்லாமல் இங்கே போய்வரலாம். மகேந்திர பல்லவரின் சிற்பச் செல்வங்களைக் கண்டு மகிழலாம். கடற்கரைக் கோயில்களோ கண்கொள்ளாக் காட்சி.

புகைப்படங்கள் :
எம். நடராஜன்








வீராதி வீரன் - 2

கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..




ஜிம்மி வெற்றியோடு திரும்பியதும் ரஹீமின் உற்சாகத்திற்கு அளவில்லை.
இந்தா இதையும் கொண்டு கொடு போ. நம்மிடம் நிறைய இருக்கிறதே. அங்கு எல்லாரும் பட்டினி.
ஜிம்மியிடம் ரஹீம் காட்டும் அன்பு கிளியிடம் பொறாமையை உண்டாக்குகிறது.
ம்! இந்த டப்பாவைக் கொண்டு போய்க் கொடுப்பது தானா பிரமாதம்? இதற்காகவா இந்த நாய்க்கு இவ்வளவு பாராட்டு? இதோ பார்...
ஒரு சாக்லேட் டப்பாவைத் தன் கால்களில் இடுக்கிக் கொண்டு கம்பி வேலிக்குமேல் பறந்தது கிளி. டின் வழவழப்பான பக்கங்களைக் கொண்டிருந்ததால் கிளியின் கால் பிடி வழுக்குகிறது.....
சாக்லேட் டப்பா நழுவிப் பாகிஸ்தான் காவல் வீரனின் தலையில் விழ...
சிப்பாய்கள் கிளியைச் சுடத் துப்பாக்கியைத் தூக்க.....
நிலைமை மோசமானதை உணர்ந்த ரஹீம் தன் படையுடன் மறைவிடத்திலிருந்து தப்பி ஓடலானான்.
அதோ, ஒரு பங்களா தேஷ் பயல்! விடாதே, பிடி..
!!!


வெகு சாமர்த்தியமாக நெடுந்தூரம் ஓடிய ரஷீம் அவசரத்தில் பாதி எரிந்து நிற்கும் இரு மரக்கம்பங்களுக்கிடையே தன் கழுதையை இழுத்துக் கொண்டு போக, அதன் மேல் மூட்டை இருந்ததால் சிக்கிக் கொண்டது.
ஐயையோ! பாகிஸ்தானியர் நெருங்கி விட்டார்களே....
நிலைமையைப் புரிந்து கொண்ட குரங்கு உடனே...
இந்தா இதையும் வாங்கிக் கொள்..
குரங்கும் ரஷீமும் குறி தவறாது வீசி இரு பாகிஸ்தானிய வீரர்களையும் வீழ்த்தினர்.
அச்சா! இந்தத் துப்பாக்கி இருக்கட்டும், பயன்படும்.
தன் தோழர்கள் தொடரத் தன் மறைவிடத்துக்கு வந்து சேர்ந்தான் ரஷீம்.
நிலவறையில் தன் நண்பர்களின் பசியைத் தணிக்கும் பணியில் ரஷீம் ஈடுபட்டிருக்கும் போது குரங்கு ஜம்பு துப்பாக்கியை ஆராய்ந்து கொண்டிருந்தது.
ஜம்பு... ஏய்...ஏய்! அதில் எதையாவது பிடித்து இழுத்து வைக்காதே...ஜம்பு...
ஆனால் ஜம்பு இழுக்க வேண்டியதை இழுக்கவே நடக்க வேண்டியது நடந்தது! அதிலிருந்து பறந்த தோட்டா, இவர்களைத் தேடி வந்து கொண்டிருந்த பாகிஸ்தானிய சிப்பாயின் குல்லாவைக் கொத்திக் கொண்டு போயிற்று.




ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் பிராங்க்பர்ட் மிருகக் காட்சிசாலையில் பல அற்புதமான பிராணிகள் உள்ளன. மேலே இருப்பது 'மூர் மகாக்' எனப்படும் குள்ளக் குரங்கு. இந்தோனேஷியாவின் ஒரு தீவில் மட்டுமே இக் குள்ளக் குரங்குகள் காணப்படுகின்றன. உள்ளங்கைக்குள் அடங்கும் அதிசயக் குரங்கு மூர் மகாக். கீழேயுள்ளது குள்ளக் குதிரை. ஜெர்மன் குழந்தைகள் 'டினிக்கி' என்று இதைச் செல்லமாகக் கூப்பிடுகிறார்கள். இதன் உயரம் 41 சென்டிமீட்டர் தான். இதை 14,000 ரூபாய்வரை விலை கொடுத்து வாங்கப் பலர் முயன்றனர். ஆனால் குழந்தைகளின் குதூகலத்தைக் குலைக்க விரும்பாத காட்சிசாலை அதிகாரிகள் இதை விற்க மறுத்து விட்டனர். நியாயம்தானே?

நன்றி : யு. பி. எஸ்.



என்ன விந்தையம் பாரு....!



'அடேயப்பா! இந்தக் கோழிக்குத்தான் எத்தனை நீளமான வால்? இது நிஜம்தானா? இப்படியொரு கோழி உயிரோடு இருக்க முடியுமா' என்று உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் நேரே ஜப்பானுக்குப் போக வேண்டும். அங்கு 'ஷிக்கோகு' என்றொரு தீவு இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக இங்குள்ளவர்கள் இப்படி நீண்ட வால் உள்ள கோழிகளை உற்பத்தி செய்வதில் விசேஷ ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள். இயற்கை முறை தவறி வக்ரம் புரியும் போது, அதைக் கொண்டு மனிதன் தன் கற்பனையை வளர்த்துக் கொள்ளச் செய்யும் காரியங்களுள் ஒன்றுதான் இதுவும். இன்று அங்கு காணப்படும் கோழியினுடைய வாலின் நீளம் 36 அடி வரை இருக்கிறது. தன் மகிழ்ச்சிக்காக மனிதன் செய்யும் இக் காரியத்தினால் பாவம் அந்தக் கோழிக்கு எவ்வளவு அசௌகரியமாக இருக்குமோ, யார் கண்டது?




ஓட்டக் கற்கும் போதினிலே!

நம்பி சீனிவாசன்


ஜாலியாக மோகன் இன்று
சைக்கிள் ஓட்டக் கற்கிறான்.
கோலி ஆடும் மூன்று நண்பர்
கூட்டமாகச் சூழ்கிறார்.



பின்னிருந்து கிட்டு தள்ள,
பெரிய சாமி பிடிக்கிறான்.
முன்னிருந்து ஹாண்டில் பாரை
முத்து சற்றுச் சாய்க்கிறான்.



'நேரே பாரு', 'தள்ளு பெடலை'
'நிமிர வேண்டும்' என்றெலாம்
ஜோராய் நண்பர் கூவுகின்றார்
சுருக்கு வழிகள் சொல்கிறார்!



மோகன் சைக்கிள் ஓட்டக் கற்க,
மோகன் நண்பர் மகிழ்வதேன்?
ஓஹோ என்றே ஊக்கமூட்டி
உவகை யோடு புகழ்வதேன்?



ஓட்டக் கற்கும் மோகன் இங்கே
உணரும் இன்பம் பெரியதோ?
கூட்ட மாக உதவும் நண்பர்
கொள்ளும் இன்பம் பெரியதோ?



தெரியுமா?

1. இன்று உலகில் மிக அதிகமான ஜனத்தொகையுள்ள நகரம் எது?

2. பிரிட்டனின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் என்ன?

3. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம் எது?

4. பால், கிரீம் இவற்றில் கனமானது எது?

5. கண்டுபிடிக்கப் பட்டுள்ள வாயுக்களில் மிகவும் இலேசானது எது?

6. எந்த ஒரு பொருளை நெருப்பு அழிக்க முடியாது?

7. புகழ் பெற்ற விஞ்ஞானி ஒருவர் சித்திரக்காரராகவும் விளங்கினார். அவர் யார்?

8. ஐரோப்பாவின் மிக நீளமான நதி எது?

9. கீழ்க்கண்ட ஜீவராசிகளுக்கு எத்தனை கால்கள்? A. சிலந்தி, B. வண்டு, C. அனகோண்டா, D. ஆர் டோலான்

10. எந்த ஒரு விளையாட்டோடு கீழ்க்கண்ட பெயர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன? A. கல்கத்தா கோப்பை, B. டேவிஸ் கோப்பை, C. ரைடர் கோப்பை, D. லான்ஸ்டேல் பெல்ட், E. ஸ்டிக்ஸ் F. மூன்றும் மனிதன்.

11. தென் ஆஸ்திரேலியாவின் தலைநகர் எது?

(விடை: 25ம் பக்கம் பார்க்க)

அட்டைப்பட அணில்:
கோகுலத்தை விடவா ஆப்பிள் பழம் சுவையாயிருக்கிறது?
வண்ணப்படம்: வித்யாஸ்ரதா.



ற் க த க் அ ற க

ட ற் ச நி க ன் க்

ற் ற் கு ப த் வை த க க

ற் ர் ற க பி

சிந்தனை செய் மனமே!

இந்தப் பக்கத்தின் பார்டரில் ஏதேதோ எழுத்துக்கள் வருகின்றன, இல்லையா? அதற்குள் ஒரு புகழ்பெற்ற பாடல்—அறிவுரை—ஒன்று அடங்கியிருக்கிறது. சரியான ஓர் எழுத்தைத் தேர்ந்தெடுத்து அதன் பிறகு ஓர் எழுத்து விட்டு ஓர் எழுத்தாகச் சேர்த்துக் கொண்டே வந்தால் அந்தப் பாடல் பளிச்சென்று புரிந்துவிடும். ஆரம்ப எழுத்தே அறிவுரையின் முடிவு எழுத்தாக இருமுறை இடம் பெறும். அப்பிரதட்சிணமாக எழுத்துக்களைக் கோக்க வேண்டும். பாடல் புலப்பட இரண்டு முறை பார்டரைச் சுற்றுலா வரவேண்டியிருக்கும்!

☐ பனமா கால்வாய் தெரியுமா?... ப...ன...மா கால்வாய்! வட தென் அமெரிக்காக்களைப் பிரிக்கும் கால்வாய் அல்லவா அது? அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து பசிபிக் சமுத்திரத்துக்கு ஒரு கப்பல் பனமாக் கால்வாய் வழியாக வருகிறது. அப்போது கப்பல் தெற்கு நோக்கி வருமா? தென் மேற்காகப் போகுமா? அல்லது வடகிழக்காக நகர்ந்து வருமா?

☐ மார்கழி மாதத்துத் தாங்க முடியாத குளிர். ஐந்து கிராமவாசிகள் ஒரு கணப்பைச் சுற்றி உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். எப்படி? காத்தான், மூத்தானுக்கும் தாத்தானுக்கும் நடுவில் உட்கார்ந்திருந்தான். மாத்தானோ, மூத்தானுக்கும் தோத்தானுக்கும் நடுவிலிருந்தான். அப்படியானால் தோத்தான் யார் யாருக்கு நடுவில் உட்கார்ந்திருந்தான்? சட்டென்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் ஏமாந்தான்தான்!

☐ தங்கராசு ஒரு லாரி டிரைவர். கந்தசாமி ஒரு டிராபிக் கான்ஸ்டேபிள். ஒருவழிப் பாதையில் தவறான வழியில் தங்கராசு போனான். கந்தசாமி அதைப் பார்த்ததும், 'கண்டு'க் காதவராக இருந்தார். ஏன் அப்படிக் கடமையை மறந்த கான்ஸ்டபிளானார் அவர்?

☐ மூன்று பூனைகள் மூன்று எலிகளை மூன்று நிமிஷங்களில் பிடிக்குமானால் நூறு எலிகளை நூறு நிமிஷங்களில் பிடிக்க எத்தனை பூனைகள் வேண்டும்?

☐ சில குழந்தைகள் பூப்பறிக்கக் கிளம்பினார்கள். ஒவ்வொருவரிடமும் காலியான பூக்குடலை இருந்தது. அவர்கள் பூப்பறிப்பதில் கெட்டிக்காரர்கள். இந்த நிமிஷம் குடலையில் எத்தனை பூக்கள் இருக்கின்றனவோ, அவை அடுத்த நிமிஷம் இரண்டு மடங்காகிவிடும். அத்தனை வேகமாகப் பூப்பறிப்பார்கள். பத்தே நிமிஷங்களில் குடலைகள் நிரம்பிவிட்டன. அப்படியானால் குடலையில் பாதி பாகம் நிரம்புவதற்கு எத்தனை நிமிஷங்கள் பூப் பறித்திருப்பார்கள்?

[விடைகள் 27ம் பக்கம்]











சுண்டு, குண்டு, சீமாத் தாத்தா

சாமா

“மஸ்தான் மளிகைக் கடைக்குப் போய் ஒரு கிலோ சர்க்கரை வாங்கிக் கொண்டு வாங்கோ. அப்பத்தான் கசக்காத காப்பி கிடைக்கும்'' என்றாள் அம்மா.

''போம்மா, எங்களுக்குக் கடைக்குப் போக வழி தெரியாது'' என்றார்கள், சுண்டுவும் குண்டுவும். இதைக் கேட்டுக் கொண்டே பேப்பர் படித்துக் கொண்டிருந்த சீமாத் தாத்தா, ''டேய், பசங்களா! நேரே போய்க் குளத்துக்குப் பக்கத்துச் சந்தில் திரும்பி நடந்தால் மெயின் ரோடு வரும். அதைக் கிராஸ் பண்ணிக் கொஞ்சம் இடது பக்கம் போனால் 'டெலிபோன் பூத்' வரும். அப்படியே திரும்பினால் முதல் கடை மஸ்தான் மளிகை'' என்றார்.

''தாத்தாவுக்கு என்ன? கண்ணை மூடிண்டு சொல்லிட்டார்'' என்றான் சுண்டு.

''கண்ணை மூடிண்டு சொல்றது என்னடா? கண்ணைக் கட்டிண்டே நான் அந்தக் கடைக்குப் போவேனாக்கும். பத்தடிகூட இல்லை. இதுக்கா இத்தனை!'' என்றார் சீமாத் தாத்தா.

'''கண்ணைக் கட்டிக் கொண்டா? ஏன் தாத்தா வீண் ஜம்பம் பேசறீங்க?'' — இது குண்டு.

''ஜம்பமில்லேடா. போய்க் காட்டறேன். என்ன பந்தயம்?'' என்று சவால் விட்டார் தாத்தா. அதை ஏற்றுக் கொண்டனர், குண்டுவும் சுண்டுவும். தாத்தாவின் கண்களை அவரது மேல் துண்டாலேயே கட்டினார்கள் இருவரும். கிளம்பி விட்டார் சீமாத் தாத்தா.

''தாத்தா, விளக்கு போஸ்ட்...''

''தாத்தா, போஸ்ட் பாக்ஸ்...!''

''ஐயையோ! மாட்டு வண்டி... அதோ சைக்கிள்.....''


''காரில் மோதிக்....''

இப்படியாகக் குண்டு, சுண்டுவின் எச்சரிக்கைகள் கூட்டியம் கூற, கார் ஹாரன்கள் 'பாங்—பீங்' என்று அலறி ஓலமிட, தாத்தா நடை போட வீதியெல்லாம் ஒரே கூட்டம், இந்த வேடிக்கையைப் பார்க்க! போலீஸ்காரர் தம் 'விசிலை'ப் பலமாக ஊதியபடி ஓடி வந்தார் சீமாத் தாத்தாவைப் பிடித்து நிறுத்த. ஆனால் தாத்தா அவர் கையில் சிக்குவதற்குள் கார்களின் இடையே போலீஸ்காரரே சிக்கிக் கொண்டார், பாவம்!

சொன்னபடியே தாத்தா கட்டின கண்ணுடன் மஸ்தான் மளிகைக் கடை முன் போய் நின்றார். குண்டுவுக்கும் சுண்டுவுக்கும் வியப்பான வியப்பு.

''தாத்தா, இப்போது உங்கள் கண் கட்டை அவிழ்த்து விடறோம். நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்'' என்று கூறியபடியே தாத்தாவின் கண்கட்டை அவிழ்த்துக் கடையின் முன்னாலிருந்த ஒரு போர்டின் அருகில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அதில் எழுதியிருந்ததைப் படித்ததும் அப்படியே...சீமாத் தாத்தா தலை சுற்றி விழும்படி அந்தப் பலகையில் எழுதி யிருந்தது இதுதான்:

“சர்க்கரை ஸ்டாக் இல்லை !”





சுவேதகேது

ரா. கணபதி

ரிஷிகளும் தங்களது புதல்வர்களை வேறு ரிஷிகளிடம் கல்வி கற்பதற்காக அனுப்பி வைப்பார்கள். தந்தையிடம் மகன் அடங்கி நடக்காமற் போகலாம். தந்தையும் அன்பு காரணமாக மகனை அடக்கி நடத்தாமல் போகலாம். கண்டிப்புக் காட்டிச் சீடனை நல்வழிப் படுத்தும் குருவிடம் ஒருவன் கல்வி பயிலுவதே அவனுக்கு நன்மை பயக்கும். இதனால்தான் சில ரிஷிகளும் தமது குழந்தைகளை வேறு ரிஷிகளிடம் குருகுல வாசம் செய்ய அனுப்பினர்.

அருணரின் புதல்வரான உத்தாலக ஆருணி பெரிய ஞானி. அவரது பிள்ளையின் பெயர் சுவேதகேது.

சுவேதகேதுவுக்கு அடக்கம் போதாது. எனவே உத்தாலகர் அவனுக்குத் தாமே கல்வி போதிக்காமல் வேறு ரிஷிகளிடம் அனுப்பி வைத்தார்.

ஆனால் குருகுலவாசம் செய்யும் போதும் சுவேதகேதுவுக்கு அடக்கம் ஏற்படவில்லை. மாறாகக் கர்வமே அதிகரித்து வந்தது. அவனது குருமார்களாலும் அவனுக்கு அடக்கம் கற்பிக்க முடியவில்லை. அடக்கம் இல்லாத அவனுக்கு



உத்தமமான உபதேசங்களையும் குரு போதிக்கவில்லை. பன்னிரண்டாண்டுகள் இப்படிக் கழிந்தன.

எல்லாம் படித்து முடித்துவிட்டோம் என்ற செருக்குடன் தந்தையிடம் திரும்பி வந்தான் சுவேதகேது.

அவனது நடை உடை பாவனையிலிருந்தே அவனுடைய கர்வப்போக்கைப் புரிந்து கொண்டார் தந்தை. இப்படிப் பட்ட கர்விக்குக் கடவுளைப் பற்றிய உண்மைகளை எந்தக் குருவும் போதித்திருக்கமாட்டார் என்று ஊகித்தார். எல்லாம் வல்ல கடவுளைப் பற்றிப் போதனை பெற்றவர்களிடம் கர்வமே இருக்காதே! கடவுளை நாம் அறிவால் அளக்க முடியாது. நம் அறிவுக்குக் கடவுளை அளக்கச் சக்தி இல்லை என்பதை உணர்ந்தபின் எவரும் கர்வம் கொள்ள முடியாது!

உத்தாலக ஆருணி, "குழந்தாய், சுவேதகேது! கல்வியில் நமக்கு நிகரில்லை என்று நீ பெருமிதம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எல்லாம் அறிந்துவிட்டோம் என்று நீ எண்ணுகிறாய் போலும்! நல்லது. அறிவினால் அளவிட முடியாத ஒன்று உண்டே, அதைப் பற்றி உன் குருமாரிடம் உபதேசம் பெற்றாயா?" என்று கேட்டார்.

அறிவால் அளவிட முடியாதவர் கடவுள். அவரே நமக்குள்ளும் இருந்து நமக்கு உயிர் தருகிறார். ஞானிகள் தங்களுக்குள்ளேயே உயிராக உள்ள கடவுளை உணருவார்கள். இதுவே கல்வியின் முடிவு.

ஆனால் கர்வம் கொண்ட சுவேதகேதுவுக்கு இந்த உண்மை போதிக்கப்படவில்லை.


"அறிய முடியாத பொருள் ஒன்று உண்டா? அதை எப்படி உபதேசிக்க முடியும்?" என்று எதிர்க் கேள்வி கேட்டான் சுவேதகேது. அப்போதும் அவனுடைய கர்வம் நீங்காததால், தனது தகுதியின்மையால்தான் இப்படிப்பட்ட உபதேசம் தனக்கு அளிக்கப்படவில்லை என்று அவன் உணரவில்லை. "என் குருமார்களுக்கே இவ்விஷயம் தெரியாது போலும். அதனால்தான் எனக்கு உபதேசிக்கவில்லை. ஐயனே! தாங்களே இதனை உபதேசிக்க வேண்டும்" என்றான்.

"அவ்விதமே ஆகட்டும்" என்றார் உத்தாலகர்.

'உபதேசம் தர வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிற பணிவு எவனுக்கு ஏற்பட்டாலும் உடனே ரிஷிகள் அவனுக்கு உபதேசம் தருவார்கள்!

சுவேதகேது இப்போது இவ்விதம் கேட்டுக் கொண்டதால் அவனுக்கு





உபதேசம் தொடங்கினார் தந்தை உத்தாலகர்.

'அறிய முடியாத ஒன்று உண்டா?' என்று அவன் ஐயம் கொண்டானல்லவா? கடவுளை அறிவால் அறிய முடியாவிட்டாலும் அவர் உண்டு; அவரைக் கண்ணால் காண முடியாவிட்டாலும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பதைச் சுவேதகேதுவுக்கு உணர்த்த முற்பட்டார் உத்தாலகர்.

நமது அறிவு என்பதே கடவுளிடம் தோன்றியதுதான். நாம் தூங்குகிற போது அறிவு செயல்படவில்லை. ஆயினும் நாம் தூக்கத்திலும் உயிருடன் இருக்கிறோம். அதாவது, அறிவுக்கும் எட்டாத நுண்ணிய உயிரின் வடிவாகக் கடவுள் இருக்கிறார். கடவுளேதான் பலவிதமான அறிவுகளை எடுத்துக் கொண்டு பலவிதமான மனிதர்களாகவும், புலி, சிங்கம், செந்நாய், புழு, பூச்சி எல்லாமாகவும் ஆகியிருக்கிறார். அறிவுக்கு ஆதாரத்தைத் தேடிக் கொண்டே போனால் அவரே நாமாகி இருக்கிறார் என்று அறியலாம். இதையெல்லாம் சுவேதகேதுவுக்கு உபதேசித்தார் உத்தாலகர்.

கடவுள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அவரே நமக்குள் இருந்து, நம்மை இயக்குகிறார் என்று உணர்த்த விரும்பிய உத்தாலகர், ''சுவேதகேது! ஓர் ஆலம்பழம் கொண்டுவா'' என்றார்.

அவன் அவ்விதமே கொண்டு வந்து, ''இதோ, ஆலம் பழம், பகவானே!'' என்றான்.

''அதைப் பிள'' என்றார் தந்தை.

''பிளந்தேன், பகவானே.''

''உள்ளே என்ன தெரிகிறது?''

''சின்னச் சின்ன விதைகள், பகவானே!''

''அந்த விதையில் ஒன்றைப் பிள.''

''பிளந்தேன், பகவானே!''

''அதற்குள் என்ன தெரிகிறது?''

''ஒன்றுமேயில்லை'' என்றான் சுவேதகேது.

'ஒன்றுமில்லை' என்று அவன் சொன்னாலும் அந்த விதைக்குள்ளிருந்துதானே பெரிய ஆலமரம் உண்டாகிறது! கண்ணுக்குத் தெரியாத அந்த ஏதோ ஒரு சக்தியிலிருந்துதானே பெரிய ஆலமரம் உண்டாகிறது? இவ்வாறேதான் கண்ணுக்குத் தெரியாத, அறிவுக்கு எட்டாத கடவுள் நாமாக ஆகி நமக்குள் இருந்து வருகிறார்.

இப்படி உபதேசித்தார் உத்தாலகர்.

''சுவேதகேது, நீரில் உப்பைப் போட்டு வை. நாளைக் காலை மறுபடியும் என்னைப் பார்'' என்றார்.

அன்று உபதேசம் அதோடு முடிந்தது.

மறுநாள் காலை பணிவுடன் அவரிடம் வந்து நின்றான் சுவேதகேது. தனக்குத் தெரியாத உண்மைகளும் உண்டு என்பதை அறிந்த பின் அவனது கர்வம் ஓடிவிட்டது!

''நேற்றிரவு உப்புப் போட்டு வைத்த நீரைக் கொண்டுவா, பிள்ளாய்!'' என்றார் உத்தாலகர்.

சுவேதகேது அவ்விதமே செய்தான்.

''நீரில் உப்புத் தெரிகிறதா?'' என்றார் உத்தாலகர்.

''தெரியவில்லை!'' என்றான் சுவேதகேது.

''சரி, அந்த நீரை மேலாகக் குடித்துப் பார்'' என்றார் உத்தாலகர்.

பாத்திரத்திலே யிருந்த நீரைச் சிறிது குடித்தான் சுவேதகேது.

''எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் தந்தை.

அவர் கேளாமல் அவன் வாய் திறப்பதில்லை. அவ்வளவு பணிவு வந்துவிட்டது சுவேதகேதுவுக்கு!

''உப்புக் கரிக்கிறது'' என்றான்.

''சரி, நடுவிலுள்ள ஜலத்திலும் சிறிது குடித்துப் பார், எப்படி இருக்கிறது என்று சொல்'' என்றார் தந்தை.

அவ்விதமே செய்த சுவேதகேது, ''இதுவும் கரிக்கிறது'' என்றான்.

''அடியிலும் சிறிது குடி. அதன் ருசியைச் சொல்'' என்றார் உத்தாலகர்.

குடித்துப் பார்த்த சுவேதகேது, ''இதுவும் உப்பாகவே உள்ளது'' என்றான்.

பிறகு தந்தை சொன்ன வண்ணம் பாத்திரத்தில் உள்ள நீரை வெளியே கொட்டிவிட்டு வந்து, அவர் முன் பய பக்தியுடன் அமர்ந்தான்.

''பாத்திரத்தில் கண்ணுக்குத் தெரியாமலே எங்கும் பரவியிருந்த உப்புப் போலவே கடவுள் கண்ணுக்குத் தெரியாமல் அனைத்திலும் நிறைந்திருக்கிறார்'' என்று உபதேசித்தார் உத்தாலகர்.

தனது கர்வத்தைப் போக்கி ஞானம் உபதேசித்த குருவான தந்தையிடம் மிகுந்த நன்றி கொண்டான் சுவேதகேது.

தெரியுமா ? – விடைகள்

1. டோக்கியோ (ஜப்பான்)
2. யந்திரங்கள்.
3. மெர்க்குரி.
4. பால்.
5. ஹைட்ரஜன் (ஜலவாயு)
6. ஆஸ்பெஸ்டாஸ்.
7. லியோனார்டோ டாவின்ஸி.
8. வோல்கா.
9. (a) எட்டு.
   (b) ஆறு.
   (c) ஒன்றுமில்லை.
   (d) இரண்டு.
10. (a) ரக்பி உதை பந்தாட்டம்.
    (b) லான் டென்னிஸ்.
    (c) கால்ஃப்.
    (d) குத்துச்சண்டை.
    (e) ஹாக்கி.
    (f) கிரிக்கெட்.
11. நியூஜிலாந்து.

''பிள்ளாய்! ஒருவனை முன் அறிமுகம் இல்லாத ஒரு நாட்டில் கண்ணைக் கட்டி விட்டால் வழி தெரியாமல் எப்படித் தவிப்பான்? அவ்விதமே இந்த உலகில் நாம் அனைவரும் உண்மை ஞானத்துக்கு வழி தெரியாமல், கர்வத்தால் கண்ணைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். குரு என்பவரே அந்தக் கட்டை அவிழ்த்துவிட்டு வழி சொல்லித் தருகிறார்'' என்று முடித்தார் உத்தாலக ஆருணி.





பனானல் தீவின் பழங்குடிகள்

தென் அமெரிக்காவில் உள்ளது பிரேஸில் நாடு. அங்கு அரகுயா என்று ஒரு நதி தன்னுடைய பிரயாணத்தைக் கானகத்தினூடே தொடர்ந்து கடலில் போய் முடிக்கிறது. இந்நதி தன் வழியில் இரண்டாகப் பிரிந்து நூறு மைல்களுக்கு அப்பால் மறுபடியும் ஒன்று சேருகிறது. இப்படிப் பிரிந்து சேரும் இடைப் பகுதியில் 8,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட பனானல் என்ற தீவு உருவாகியிருக்கிறது. இந்தத் தீவுப் பகுதியில் ஒரு பழங்குடி மக்கள் வாழுகிறார்கள். இவர்களைக் 'கராஜா' இந்தியர்கள் என்று அழைக்கிறார்கள். வரலாற்றுப் பெருமை மிக்கவர்கள் இந்தக் கராஜா இந்தியர்கள். சிறப்பான கலை உணர்வு கொண்டவர்கள். வண்ணக் களஞ்சியமான தலையலங்காரம் செய்து கொள்ளுவதிலும், கற்பனை மிகுந்த வண்ணக் கோலங்களை உடலில் தீட்டிக் கொள்ளுவதிலும் வல்லவர்கள்.

இவ்வினத்து மக்களை எளிதில் இனங் கண்டுகொள்ள முடியும். கண்களுக்குக் கீழே கன்னத்தில் வட்ட வடிவில் ஆழமான வெட்டுவாய்த் தழும்பைக் கொண்டிருப்பார்கள் இவர்கள். இந்த இனத்தில் பையனுக்கு ஒன்பது வயதானதும் கீழ் உதட்டில் ஒரு துளை செய்து அதில் மரத்தினாலான குச்சியை நுழைத்துத் தொங்க விடுவார்கள். குச்சியின் நீளம் வயது ஏற ஏற வளர்ந்து கொண்டே போகும். மற்ற இனத்துப் பெண்களைப் போலல்லாமல், கராஜா இனத்துப் பெண்களுக்குச் சமூகத்தில் சம அந்தஸ்து உண்டு.

வறட்சியான கோடைக் காலங்களில் கராஜா இந்தியர்கள் ஆற்றங்கரைகளில் தங்கள் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்ளுவார்கள். அடிக்கடி தங்கள் இருப்பிடத்தை மாற்றும் குணமுடைய இவர்கள் தங்கள் பழைய குடியிருப்பின் தேவையற்றவைகளைக் கழுகுகளுக்கு இரையாக்கி விடுவார்கள். அரகுயா நதி இவ்வின மக்களுக்கு ஆமை முட்டைகள், மீன்கள் ஆகிய உருவில் உணவுப் பொருளைத் தருகிறது. ஆனாலும் இவர்கள் கானகத்தினுள்ளே பல மைல்களுக்கப்பால் தோட்டங்களையும் பராமரித்து வருகிறார்கள்.

கவர்ச்சி மிக்க கண்கவர் வண்ணங்களோடு கூடிய தலையணியை அற்புதமான கலை அழகுடன் தயாரித்து அணிகிறார்கள் கராஜாக்கள். இத்தலையணிகளைத் தயாரிக்க, பஞ்சவர்ணக் கிளி, நாரை, கொக்கு, இபிஸஸ், ஹெரான் ஆகிய பறவைகளின் இறகுகளைப் பயன்படுத்துகிறார்கள். இப்பறவை இனங்களை வேட்டையாடி அதன் இறகுகளைப் பெறுகிறார்கள். இந்தப் பறவைகளின் அழகிய இறகுகள் இவ்வினத்து மக்களிடையே நாணயமாக மதிக்கப்படுகிறது. ஆரா மக்காவா போன்ற சில

பறவைகளை இவர்கள் வளர்க்கவும் செய்கிறார்கள். ஆனால் தக்க பராமரிப்பின்றி அவைகள் இறந்து விடுகின்றன. அதன் இறகுகளையும் பிறகு தலையணிக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

கராஜா இந்தியர் தம் உடலில் வண்ணக் கலவைகளால் சித்திரங்களை வரைந்து கொள்வது அவர்களின் கலை உணர்வை விளக்குவதாக இருக்கிறது. வெறும் அழகுக்காக மட்டும் இத்தகைய கோலங்களை உடலில் தீட்டிக் கொள்ளுவதில்லை. கோலங்கள், அதைத் தீட்டிக் கொள்ளுபவரின் தகுதியையும் குறிப்பனவாக இருக்கும். மணமானவர், ஆகாதவர், மனைவியை இழந்தவர், தகப்பனார், போர் வீரர் இப்படி ஒவ்வொருவரையும் அவர்களது உடலில் தீட்டிக் கொண்டிருக்கும் வண்ணக் கோலங்களின் மாறுபாட்டிலிருந்து வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

சிறு வயதிலிருந்தே கராஜா இனத்தவர் தங்கள் குழந்தைகளுக்குப் பலவிதமான வீர விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்கிறார்கள். அவைகளில் மல்யுத்தம், வில் வளைத்தல், நீந்துதல் ஆகியவை முக்கியமானவை. உறுதிவாய்ந்த உடலமைப்புக் கொண்டிருப்பதைப் பெருமையாகக் கருதிக் கர்வப்படுகிறார்கள் கராஜாக்கள். ஏனென்றால் எல்லைப் பகுதிகளில் உள்ள வேற்று இனத்தவர்களான சவாண்டஸ், கயாபோ ஆகியோருடன் அடிக்கடி போரிட வேண்டிய அவசியம் இவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் போர் வெறி கொண்டு தொல்லை தருபவர்கள். ஆகவே எந்த நேரமும் எல்லோரும் சண்டைக்குத் தயாராக இருக்க வேண்டியிருப்பதால் உடல் உறுதியில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் கராஜாக்கள்.

சிந்தனை செய் மனமே (விடைகள்)

1. இடது பக்கத்து மூலையிலுள்ள 'க'வில் ஆரம்பித்து அப்பிரதட்சிணமாக ஓர் எழுத்துவிட்டு ஓர் எழுத்தாகச் சேர்த்து வாசித்தால் வரும் குறள்:

'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக'

2. வடகிழக்காக. அட்லாஸ் படத்தை எடுத்துப் பார். உண்மை தெரியும்.


3. தோத்தான் — தாத்தானுக்கும் — மாத்தானுக்கும் மத்தியில் உட்கார்ந்திருந்தான்.

4. கடமை மறக்கவில்லை. லாரி டிரைவர் தங்கராசு நடந்தல்லவா போய்க் கொண்டிருக்கிறார்!

5. அதே மூன்று பூனைகள்தான்.

6. ஒன்பது நிமிஷங்களில் பாதிக் குடலை நிரம்பியிருக்கும். பத்தாவது நிமிஷம் அது இரட்டிப்பாகக் குடலை நிரம்பிவிடும்.






மேலே உள்ள படத்தில் ஒரு கோலத்தைச் சுற்றி எட்டுப் பிராணிகள் இருக்கின்றன இல்லையா? இதற்கு அஷ்ட கோண (கோணல் இல்லை), யந்திரம்' என்று பெயர். (மந்திரம் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்!) உங்கள் நண்பனைக் கூப்பிட்டு அவனிடம், ''இங்குள்ள பிராணிகளில் ஏதாவது ஒன்றை உன் மனத்தில் நினைத்துக் கொள். இந்தப் பிராணிகளின் ஆங்கிலப் பெயர் தெரியுமல்லவா உனக்கு? அதன் ஸ்பெல்லிங்கும் தெரிந்திருக்க வேண்டும். என்ன?'' என்று கேளுங்கள். அவன், ''ஓ, தெரியுமே!'' என்று சொல்லுவான். பிறகு நீங்கள், ''சரி, நான் இப்போது காகிதப் பென்சிலால் ஒவ்வொரு பிராணியாகத் தொடுவேன். நான் ஒரு பிராணியைத் தொட்டதும், நீ நினைத்துக் கொண்டுள்ள பிராணியின் பெயரிலுள்ள 'ஸ்பெல்லிங்'படி அதன் முதல் எழுத்தை அந்தப் பிராணிக்கு விட்டுக் கொடு. மனத்துக்குள்தான். வெளியே எனக்குக் கேட்கும்படி சொல்லாதே. இப்படியே நான் ஒவ்வொரு மிருகத்தைத் தொட்டதும் ஒவ்வோர் எழுத்தை நான் தொடும் மிருகத்துக்காக ஒதுக்கு. கடைசியாக ஓர் எழுத்து பாக்கி இருக்கும்போது மட்டும் 'நிறுத்து' என்று வாய் விட்டுச் சொல்லு'' என்று கூறுங்கள். அவன் நிறுத்து என்று சொல்லும்போது அவன் நினைத்துள்ள பிராணியின் பெயரை 'டக்' என்று நீ சொல்லிவிடுவாய். அவன் வியப்பினால் விழிகள் விரிய உன்னைப் பெரிய மந்திரவாதியாக நினைத்துப் பிரமித்துப் போவான்.

அது சரி, உனக்கு இந்த மந்திர சக்தியின் ரகசியம் தெரிய வேண்டாமா? அவன் எந்தப் பிராணியின் பெயரை நினைத்துக் கொண்டிருந்தாலும், நீ முதலில் தொடுவது வண்ணத்துப் பூச்சியாகத்தான் இருக்க வேண்டும். அதன் பிறகு அதிலிருந்து கோலத்தில் நேர் செங்குத்தாக எந்தப் பிராணிக்குக் கோடு போகிறதோ அது, நீ சுட்டிக் காட்டும் இரண்டாவது பிராணியாக (காண்டாமிருகம்) இருக்கும். அதன் பிறகு அங்கிருந்து உள்ள நேர் கோட்டில் உள்ள மிருகம். (பசு) இப்படியே கோலத்தின் நேர் கோடு காட்டும் பிராணிகளை மட்டும் தொட்டுக்கொண்டே போ. உன் நண்பன், 'நிறுத்து' என்று சொல்லும்போது எந்தப் பிராணியைத் தொட்டாயோ அதற்கு எதிர் நேர் கோட்டின் முடிவில் உள்ள பிராணிதான் அவன் நினைத்துக் கொண்டுள்ள பிராணியாக இருக்கும். உதாரணமாக அவன் சிங்கத்தை எண்ணியிருக்கிறான். நீ முதலில் பட்டாம் பூச்சி (L) அடுத்துக் காண்டாமிருகம். (i) பிறகு பசு (O) இப்படிக் காட்டியதும் மீதமுள்ளது (N) இல்லையா? அப்போது நண்பன் நிறுத்து என்பான். நீ உடனே பசுவிலிருந்து போகும் நேர் கோட்டில் உன் பார்வையை ஓடவிடு. அது சிங்கத்தில் போய் முடியும். நீ உடனே ''என்னப்பா! நீ எண்ணிக் கொண்டது சிங்கம் தானே?'' என்று கேட்டால் அவன் பிரமிக்காமல் என்ன செய்வான்? எந்த மிருகமாயினும் அதன் 'ஸ்பெல்லிங்'படி ஆரம்பம் வண்ணத்துப் பூச்சியாகக் கொண்டால் முடிவு அவன் எண்ணிய அந்தப் பிராணியினுடைய இடமாகவே இருக்கும். சந்தேகம் இருக்குமானால் செய்து பார்த்துக் கொள். ஆனால் உன் பென்சிலைக் கோலத்தின்மீது ஓடவிடாதே. கண் பார்வையால் கோட்டின் மீது நகர்த்து பென்சிலை மட்டும் 'டக் டக்' என்று ஒவ்வொரு பிராணியாகத் தொட்டுக் காட்டி எழுத்துக்களை இழக்கச் செய்ய வேண்டும். உனக்கு மந்திரவாதியாக ஆசைதானே? கூப்பிடு, உன் நண்பனை!

— வாசகி


வை...வை...! நல்ல குளிர்ந்த தண்ணீர்தான் சுகமா இருந்திருக்குமே...ஹ..ஹ..ஹா!
என்னை முட்டாளாக்கிட்டதாக நினைப்போ? பசங்களா! நான் உங்களையும் விடக் கில்லாடிங்கறதைக் காட்டலியே, என் பேர் பாலு இல்லே.
சற்று நேரங் கழித்து....
இந்தப் பயல் சரியான மட்டி தான் போலிருக்கு. புனலை இடுப்பிலேல்ல செருகிக்கிட்டிருக்கான். அவனை முட்டாளாக்க எனக்கு இன்னொரு சான்ஸ்!
ஆ! வந்தியா பயலே... நீ கண்டுபிடித்த புனல் விளையாட்டிலே நான் புதிய உத்திகளைப் புகுத்தி இருக்கேன். எப்படி இது?
சீரியோ சீனு! இந்தப் பாலு அந்த மட்டி இல்லேப்பா, தெரிஞ்சுக்க....!
ஹோ...ஹ்ஹோவ்..ஹோ! சீனுப் பயலுக்குச் சரியான "கோல்கட்"....!



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
சே, போரடிக்குது. தெருவிலே ஒரு பய நம்மோட விளையாட வர மாட்டேங்கறானே.
பார்த்துண்டே இரு. புதுசா வந்திருக்கிற அந்தப் பாலுப் பயகிட்டே ஒரு தமாஷ் செய்யறேன்.
ஹை! வாங்க, என் பேர் பாலு, உங்க பேரென்ன? அது சரி, அதென்ன கையிலே ஒரு புனல்?
என் பேர் சீனு. அவன் கிட்டு. இந்தப் புனல் ஒரு புது விளையாட்டுக்கு.
புனலை இப்படிக் காலர் பின்னாலே செருகி வைத்துக் கொள்ளணும். இந்தப் பந்தை உன் தலைக்கு மேலே தூக்கிப்போட்டு அதை இந்தப் புனலுக்குள்ளே பிடிக்கணும்.
ஆ.... அப்படித் தான்... ஸ்டெடி...!
கிட்டு ரகசியமாக...
உஷ்! இந்தாடா சீனு! தண்ணீர் பாட்டில்.
அப்படிப் பந்தைப் புனலுக்குள்ளே நீ பிடித்துக்கொண்டிருக்கும் போது நான் இப்படிச் செய்வேன்! ஹ...ஹ...ஹா! எப்படி இருக்கு? முட்டாள்.... முட்டாள்!



தினமே தினமே 'மே' தினமே!





□ மே மாதம் முதல் தேதியை—உலகிலுள்ள தொழிலாளர்களின் நல உரிமையை நினைவுபடுத்தும் தினமாக இன்று எங்கும் கொண்டாடப்படுவதைக் காண்பீர்கள். இது இருபதாம் நூற்றாண்டில் அரசியல் மாறுபாட்டினால் ஏற்பட்டது. ஆனால் மே தினத்தை மேலை நாடுகளில் பல நூற்றாண்டுகளாகவே கொண்டாடி வருகிறார்கள். எப்படி? மே தினம் என்றால் மகிழ்ச்சி அளிக்கும் நாள் — கேளிக்கை தினம் என்பதாக.

□ புராதன ரோமானியர்கள் காலத்தில் மே தினத்தன்று, கனிகளுக்கும் மலர்களுக்கும் தேவதையான 'ப்ளோரா'வைக் கௌரவிப்பதற்காக, இளைஞர்களும் யுவதிகளும் வயல்வெளிகளை நோக்கி ஆடிப் பாடிக் கொண்டு போவார்கள். மத்திய காலத்தில் மக்கள் மே தினத்துக்கு முதல் நாள் மாலையே கானகத்துக்குச் சென்று விருந்தும் கேளிக்கையுமாக இரவை அங்கேயே கழிப்பார்கள். அதிகாலையில் பசுமையான இலைகளோடுகூடிய கிளைகளோடு கானகத்திலிருந்து ஊர் திரும்புவார்கள். தங்கள் வீட்டு வாசலைக் கொண்டு வந்த அந்தக் கிளைகளால் அழகுபடுத்துவார்கள்.

□ மே தினத்தன்று அதிகாலை வேளையில் புல், இலைகளின் மீது படிந்துள்ள பனித் துளி அழகை அதிகரிக்கச் செய்யும் அருமருந்தாக நம்பப்பட்டது. ஆகவே, பெண்கள் அதிகாலையில் எழுந்து தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் போய்ப் பனித் துளிகளைச் சேகரித்து முகத்திலும் உடலிலும் பூசி மகிழ்வார்கள்.

□ கடந்த நூற்றாண்டில் மே தினம் எப்படிக் கொண்டாடப்பட்டது, தெரியுமா? இலை, தழை, மலர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கோபுரம் போன்ற கூண்டுக்குள் ஒரு மனிதன் புகுந்து கொண்டு வீதிகளில் பவனி வருவான். நம் திருவிழாக்களில் பூதம், பூதகிக் கூண்டு நடந்து வருமே அதுபோல. இந்த நடமாடும் தழைக் கோபுரத்தோடு ஒரு பெண் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் வருவாள். கூட்டம், கொம்மாளம், குதூகலம்தான்!

□ வடக்கு இங்கிலாந்தின் சில பகுதிகளில் மே தினத்துக்கு முதல் நாள் இரவை 'விஷமக்கார இரவு' என்று வர்ணிக்கிறார்கள். அன்று இரவில், வீடு, கழனிகளின் கதவுகள் அகற்றப்பட்டிருக்கும், தாழ்ப்பாள் பறிக்கப்பட்டு ஒளித்து வைக்கப்படும். வியாபாரக் கடைகளின் பெயர்ப் பலகைகள் மாற்றப்பட்டிருக்கும். இவையெல்லாம் மே தினத் தமாஷ்கள்.

□ முன் காலத்தில் மே தினத்தைக் கொண்டாட மிக உயரமான மே தினக் களியாட்டக் கம்பங்களை நகரின் நடுவிலே ஊன்றுவதையே ஒரு விழாவாகக் கொண்டாடி யிருக்கிறார்கள். கானகத்திலிருந்து இதற்கென்று மிக உயர்ந்த மரங்களை வெட்டிக்கொண்டு வருவார்கள். இருபதிலிருந்து நாற்பது காளைகள் வரை இழுத்து வருமாம் இம்மரங்களை. அப்படியானால் இந்த 'மே போல்'கள் எத்தனை உயரமாக இருந்திருக்க வேண்டும்? காளைகளின் கொம்பில் காட்டு மலர்கள் சூட்டப்பட்டிருக்கும். 'மே போல்' கம்பத்தைச் சுற்றி மலர்களும் வண்ண ரிப்பன்களும் சுற்றப்பட்டிருக்கும். இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்தில் 134 அடி உயரம் உள்ள 'ஸெடார்' மரத்தினாலான 'மே போல்' கம்பம் நிரந்தரமாகவே ஊன்றப்பட்டதாம். இம்மரத்தைத் தேம்ஸ் நதியில் மிதக்கச் செய்து கொண்டு வந்தார்களாம்.

□ நம் நாட்டுப் பொய்க்கால் குதிரை போல் மே தினத்தன்று 'ஹாபி ஹார்ஸ்' என்று கோமாளிகள் ஆட்டம் போட்டபடி தெருவில் பவனி வந்து மக்களை மகிழ்விப்பார்கள்.

□ பிரிட்டனின் பல பாகங்களில் 'மேதின ராணி' தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். இதில் மிகப் பிரபலமானது கென்ட் மாகாணத்திலுள்ள ஹேய்ஸ் என்ற இடத்தில் லண்டனின் மே தின ராணிக்கு மகுடம் சூட்டுவது.

இத்தகைய கோலாகலமும் குதூகலமுமான மே தினம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழிலாளர் நல உரிமைத் தினமாக மாறியது. அவர்களின் மகிழ்ச்சி தானே உலக சுபிட்சத்துக்கு வழி.

'கோகுலத்'தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : சதாசிவம்

REGISTERED NO. M. 9040

